**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.397/2022 P.W.3**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சரவணன் | த–பெ | வள்ளியப்பன் |
| ஊர்: | : | பாதரக்குடி | சமயம்: | |
| வயது: | : | 52/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | கடை வியாபாரம் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.10.2025**

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் பாதரக்குடியில் வசித்து பெட்டி கடை வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 07.07.2015 அன்று நான் எனது மகளை பள்ளியில் விடுவதற்காக காலை 9.00 மணிக்கு சென்று விட்டு கடைக்கு வந்து பார்த்தபோது கோவிலூர் கெமிக்கல் தொழிற்சாலை அருகில் சாலை விபத்து ஒன்று நேர்ந்ததாக அருகில் இருந்தவர்கள் சொன்னார்கள். மற்றபடி விபத்து எப்படி நிகழ்ந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. எந்த சம்பவத்தையும் நான் நேரடியாக பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

போலீசார் விசாரணையில் கடந்த 07.07.2015 அன்று காலை 9.00 மணியளவில் தன்னுடைய கடையில் இருந்தபோது திருச்சி – இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையில் திருச்சியில் இருந்து தேவக்கோட்டை நோக்கி வந்த டிஎன்45 7506 என்ற இருசக்கர வாகனத்தில் மூன்று நபர்கள் வந்ததாகவும் அந்த சமயத்தில் குன்றக்குடியில் இருந்து காரைக்குடி நோக்கி மேற்கில் இருந்து கிழக்காக அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் வந்த மாருதி ஆல்டோ கார் இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாகவும் இதனால் இருசக்கர வாகனத்தில் வந்த நபர்களுக்கு பலத்த காயம் ஏற்பட்டதாகவும் விபத்து ஏற்படுத்திய நபரை தெரிந்ததாக சொல்லிவிட்டு தற்போது வழக்கு விசாரணையில் உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.10.08 16:50:54 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி